[1994 ஏப்ரல் 26

அந்தப் பண்ணைக்குத் தேவைப்படும் தண்ணீர் காவிரியிலிருந்து நேரிடையாக குழாய் மூலம் எடுக்கப்படுகிறது. ஒவ்வொரு அடைப்புகளில் உள்ள தொட்டியில் தண்ணீர் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை மாற்றப்படுகிறது. இவ்வாறு பண்ணையில் பயன்படுத்தப்பட்டத் தண்ணீர் அருகிலுள்ள ஒடை வழியாக இறுதியில் காவிரி ஆற்றில் அதன் நீரோட்டத்திற்கு மேற்பரப்பில் கலக்கிறது. இவ்வாறு வெளியே வரும் கழிவு நீரானது 30 மீட்டர் தூரம் ஒடை வழியாக சென்று காவிரியை அடைகிறது. 12.2.1994 அன்று மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் எடுக்கப்பட்ட மாதிரி பகுப்பாய்வு செய்யப்பட்டதில், இது மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தினுடைய தர நிர்ணய அளவிற்குட்பட்டு இருக்கிற காரணத்தால் இதில் மாசு ஏற்படவில்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று மீண்டும் மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தைக் கேட்டு, மீண்டும் ஒரு முறை பகுப்பாய்வு செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 396, திரு பி.வி. இராஜேந்திரன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

*396--*

**மருதுபாண்டியர்கள் நினைவு நாளில் ஆண்டு தோறும் விழா கொண்டாடுதல்**

**25943*--திரு. பி.வி. இராஜேந்திரன்: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு வீரமரணம் எய்திய மருதுபாண்டியர்கள் நினைவு நாளில் (அக்டோபர் 24) ஆண்டுதோறும் விழா கொண்டாடிட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. பி. வி. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐரோப்பாவில் பிரன்ச் புரட்சி நடந்தவுடன் அச்செய்தியைக் கேட்டு இந்தியாவிலும், தென் மாநிலங்களில் Peninsula Confederation என்கிற விடுதலை வேட்கை உடைய ஒரு கூட்டமைப்பை, மருது பாண்டியர்கள் தலைமையில், கோபால் நாயக், கானிஜாகான், கேரளவர்மா, கிருஷ்ணப்ப நாயக் இவர்கள் எலலாம் சேர்ந்து உருவாக்கி மிகப்பெரிய விடுதலைப் போரை, First war of Independence 1799-ல் வீரபாண்டிய கட்டபொம்மன், 1800-ல் மருதுபாண்டிய சகோதரர்கள்

*1994 ஏப்ரல் 26]*

இவர்கள் ஒரு மாபெரும் யுத்ததை ஆரம்பித்து வைத்தார்கள். அதன் பின்னால், பல இடங்களில் நடந்த யுத்தத்திற்குப் பின்னால், சிறுவயல், காளையார்கோயில், திருப்பத்தூர், சிங்கம்புணரி, பரமக்குடி, அபிராமம், சாக்கோட்டை, அத்தனை இடங்களிலும் நடந்த யுத்தங்களில், பல போராட்டங்களில், மருதுபாண்டியர்களும், அந்தக் கூட்டமைப்பும் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை முறியடித்தாலும், இறுதியில் தோல்வியுற்று திருப்பத்தூர் கோட்டை மதில் சுவரில் 1801ஆம் ஆண்டு அக்டோபர் 24ஆம் தேதி, அந்தச் சுதந்திரப் போராட்ட வீரர்கள் தூக்குக் கயிற்றிலே தொங்கி வீரமரணம் எய்தினார்கள்.

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர், கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. பி. வி. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய வாரிசுகள் சிறைப் பிடிக்கப்பட்டு 1801 ஆம் ஆண்டு பிப்ரவரி 11 ஆம் தேதி அட்மிரல் நெல்சன் என்ற கப்பலில் ஏற்றப்பட்டு நாடு கடத்தப்பட்டிருக்கிறார்கள். இவ்வளவு பாரம்பரியம் மிக்க அந்த மாமன்னர்களுடைய நினைவைப் போற்றுகிற வகையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்தை நிறுவி என்றென்றும் தமிழ் மக்கள் நினைவில் அவர்கள் நிலை நிற்பதற்கு உதவி இருக்கிறார்கள். அதைப்போல மருதுபாண்டியர்களின் வாரிசுகளுக்கு உதவி வழங்குகிற திட்டத்தையும் அறிவித்து இருக்கிறார்கள். . ஏன், இந்த அரசும் கூட மருதுபாண்டியர்களுடைய சிலை வைக்கப்படுகின்ற அந்த மணிமண்டபத்திற்கு திறப்புவிழாக் கல்லைத் திறந்து வைத்திருக்கிறது. இன்னும் அங்கே சிலை அமைக்கப்படவில்லை. இன்னும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களைக் கேள்வி கேட்கச் சொல்லி இருக்கிறேன். (குறுக்கீடு) வேறு என்னென்னவெல்லாமோ கேட்கிறீர்கள். சிலை அமைக்கக் கல்லை வைத்திருக்கிறார்கள், சிலை இல்லை என்றெல்லாம் சொல்கிறீர்கள். இதிலே அதெல்லாம் வருவதற்கு வாய்ப்பில்லை. கேள்வி கேட்பதாக இருந்தால் கேட்கலாம். இல்லை என்றால் அடுத்த உறுப்பினரைக் கூப்பிட வேண்டி இருக்கும்.

**திரு.பி.வி. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த விழாவினை அரசு ஏற்று நடத்தவேண்டும். அந்த மாபெரும் விடுதலைப் போராட்ட வீரர்களுக்குப் பெருமை சேர்க்க வேண்டும் என்று கேட்டு உங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கனிவான பதிலை எதிர்நோக்குகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. தென்னவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் புகழுக்குரியவர்களோ, யார் பெருமைக்குரியவர்களோ, யாரெல்லாம் போற்றப்பட வேண்டுமோ, யாரெல்லாம் பெருமைப்படுத்தப்பட வேண்டுமோ, யார் எல்லாம் நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டார்களோ, யாரெல்லாம் இந்தச் சமுதாயத்திற்காகப் பணியாற்றினார்களோ அவர்களை எல்லாம் பெருமைப்படுத்துகிற அரசாக இதய தெய்வம் புரட்சித் தலைவி அரசுதான் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியத் துணைக் கண்டத்திலேயே விளங்கிக் கொண்டிருக்கிறது. வேறு எந்த மாநிலத்திலும் இந்த அளவுக்கு நாட்டுக்காக உழைத்தவர்களைப் பெருமைப்படுத்தியவர்கள் இல்லை என்று சொல்லத்தக்க அளவுக்கு புரட்சித் தலைவி அரசு பெருமைப்படுத்தி வருகிறது. அந்த அடிப்படையில் மருதுபாண்டியர் பிறந்தநாள் விழா ஆண்டுதோறும் அரசின் சார்பில் இராமநாதபுரம் மாவட்டத்திலும், பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டத்திலும் நடத்தப்பட்டு வருகிறது என்பதை உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். ஆகவே பிறந்தநாள் தான் கொண்டாடப்பட வேண்டும். யாரும் நினைவுநாளைக் கொண்டாடுவதில்லை. நினைவுநாளை நினைத்துப் பார்க்கலாம். ஆகவே பிறந்தநாளை நாங்கள் இன்றைக்குக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமாத்திரமல்ல, மருதுபாண்டியர் நினைவகத்திலே விரைவிலே சிலை அமைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மருதுபாண்டியர் இறந்ததற்குப் பிறகு இன்றைக்கு அவர்களுடைய வரலாற்றை மிகுந்த அக்கறையோடு எடுத்துச் சொல்கிறார்களே, உறுப்பினர் அவர்களுடைய ஆட்சியில் அதாவது மருதுபாண்டியர் இறந்தபோது கூட காங்கிரஸ் கட்சி ஆட்சியிலேதான் இருந்தது. விடுதலைப்போரிலே ஈடுபட்டவர்கள் யாரையாவது (குறுக்கீடு) 1952-லே இருந்து 1962 வரை நீங்கள்தான் ஆட்சியிலே இருந்தீர்கள். அப்போது மருதுபாண்டியர்களைப் பெருமைப் படுத்தினீர்களா? மருதுபாண்டியர்களுக்கு நினைவகத்தை உருவாக்கினீர்களா? நாட்டுக்கு உழைத்தவர்கள் யாரையாவது பாராட்டி நீங்கள் விழா கொண்டாடியது உண்டா? புரட்சித் தலைவர் அரசும், புரட்சித் தலைவியின் அரசும்தான் நாட்டுக்கு உழைத்த தேசியவாதிகளை பெருமைப்படுத்தி இருக்கிறது.

**திரு. பி. வி. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. உணர்ச்சிவசப்பட்டுப் பேசுவதால் உண்மைகள் மறைந்துவிடுவது கிடையாது.

*1994 ஏப்ரல் 26*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் உண்மையைச் சொன்னதால்தான் உணர்ச்சி வசப்பட்டுச் சொன்னார்.

**திரு. பி. வி. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த அவையில் உறுப்பினராக இருந்தபோது 1989 ஆம் ஆண்டு அந்த அரசு நிதி ஒதுக்கீடு செய்து ஒரு சிலை அமைப்பதற்கு அனுமதி தந்தது. அந்தச் சிலை சீக்கிரம் நிறுவப்படும் என்று தற்போது அமைச்சர் சொல்கிறார்கள். ஆனால் சிலை திறந்துவிட்டதாக சிவகங்கையிலே ஒரு கல் திறக்கப்பட்டு அது அந்த மணிமண்டபத்திலே வைக்கப்பட்டிருக்கிறது. சிலையை முதலமைச்சர் அவர்களே திறந்துவிட்டதாக கல் மணிமண்டபத்திலே இருக்கிறபோது இனிமேல் சிலை வைக்கப்படும் என்று அமைச்சர் பதில் தந்திருக்கிறார்கள். அதோடுமட்டுமல்ல, சிறுவயலில் கொண்டாடப்படுவதாகச் சொன்னார். இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் ஆகிய இரண்டு மாவட்டங்களிலே கொண்டாடப்படுவதாகச் சொன்னார்கள். பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் சிறுவயல் மருதுபாண்டியருடைய 'ஹெட்குவார்ட்டர்ஸ்' என்று ஜேம்ஸ் வெல்சனுடைய மிலிட்டரி ரெம்னிசன்ஸ், வால்யூம் 1, பக்கம் 92-ல் எழுதி இருக்கிறார்கள்.. அந்தக் காலத்திலேயே 'Siruvayal, the Headquarters of Marudhupandiya, was a clean town with broad and regular streets and well-built houses' என்று எழுதி இருக்கிறார்கள். அப்படியிருந்த சிறுவயல் இன்றைக்கு சின்னாபின்னமாகி இருக்கிறது. அப்படிப்பட்ட இடத்தில் போய் விழா கொண்டாடுவதில் என்ன பெருமை இருக்கிறது? எனவே மாநில அளவில் இந்த அரசு அதை ஏற்றுக்கொண்டு நடத்துமா? விரைவில் அந்தச் சிலை, அதாவது திறக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிற அந்தச் சிலை, அங்கே கல் வைக்கப்பட்டிருக்கிற அந்தச் சிலை மணி மண்டபத்தில் வைக்கப்படுமா என்பதை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11-05*

**மாண்புமிகு திரு. மு. தென்னவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வதந்திகள் ஊர்வலம் வந்தாலும் உண்மை உறங்காது, உண்மை வெளிப்பட்டே தீரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மருதுபாண்டியருடைய பிறந்தநாள் விழா பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்திலும், இராமநாதபுரத்திலும் ஆண்டுதோறும் நடத்தப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 397, திரு. சி. சுவாமிநாதன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. சி. குழந்தைவேலு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

*397--*

**புதுக்கோட்டை மாமன்னர் அரசு கலைக்கல்லூரிக்குக் கூடுதல் கட்டிட வசதி ஏற்படுத்துதல்.**

***12739--திரு. சி. சுவாமிநாதன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) புதுக்கோட்டையில் இருக்கும் மாமன்னர் அரசு கலைக் கல்லூரிக்குக் கட்டிட வசதி போதுமானதாக இல்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், புதியதாகக் கட்டிடங்கள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது கல்லூரியில் போதுமான வகுப்பறை வசதி ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) புதிய கட்டிடம் பற்றி கோரிக்கைப் பெறப்பட்டால் அதனைப் பரிசீலித்து அரசின் நிதிநிலைக்கேற்ப தக்க மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. குழந்தைவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மன்னரால் 100 ஆண்டுகளுக்கு முன்பு இந்த மாமன்னர் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு சுமார் 200 மாணவர்கள் வசதியாகப் படிப்பதற்காக அந்தக் கட்டிடம் கட்டப்பட்டது. அந்த நாள் முதல் இந்த நாள் வரை மேற்படி கட்டிடம் விரிவுபடுத்தப்படாமல் உள்ளது. இப்போது சுமார் 2000 மாணவர்கள் அந்தக் கல்லூரியிலே படித்துக் கொண்டு வருகிறார்கள். அந்த மாணவர்களின் நலனைக் கருதி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாமன்னர் கல்லூரி விடுதியில் இருக்கிற 4 அறைகளை வகுப்பறைகளாக மாற்றுவதற்காக ரூ. 21,500-க்கான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அதற்கான அனுமதி கொடுத்து தலைமைப் பொறியாளர் (கட்டிடம்) அவர்களுக்கு 4.2.94-ல்தான்